**<u>2026 பிப்ரவரி மாதம் 17– ஆம் தேதி செவ்வாய்கிழமை</u>**

**<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>**

**<u>O.S. நெம்பர் : 7/2016</u>**

O.S. No.: 7/2016 – அழகேசன் DW1 17.02.2026

க/பெ.அழகர்சாமி

**<u>சாட்சி அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

1. 26.09.2013 ம் தேதி வழக்கறிஞர் ராஜசேகர் மூலம் பதில் அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் 26.09.2013 ம் தேதியிட்ட வழக்கறிஞர் சட்ட அறிவிப்பு என் வழக்கறிஞர் எனது சார்பாக அனுப்பியது தான், அது ஏற்கனவே வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் கூறியுள்ளப்படி சொத்துக்கள் எனது அப்பாவினுடைய அப்பாவின் சொத்துக்கள் இல்லை என்றால் சரியல்ல, எனது அப்பாவின் அம்மா பாக்கியத்தின் அப்பா தொட்டப்பக்கவுண்டரின் சொத்தாகும். தொட்டப்பக்கவுண்டர் பாக்கியத்திற்கு எந்த ஆண்டு கொடுத்தார் என்றாலும், சுமார் 60 ஆண்டுகள் இருக்குமா என்றால் சுமார் 60, 70 ஆண்டுகள் இருக்கும். பாக்கியத்திற்கு கொடுத்ததற்கு ஆவணங்கள் இல்லை என்றால் வாக்கரலாக கொடுக்கப்பட்டது. எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் அப்போது பிறக்கவில்லை என்றால் சரிதான்.

2. பாக்கியம் இறக்கும்போது பத்திரம் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது எதிர்வழக்குரையில் 15 ம் பிரதிவாதியின் தந்தையை பெற்ற பாட்டியான பாக்கியம் அவர்களுக்கும் கூட்டுரிமை ஏற்பட்டு தொட்டப்பக்கவுண்டரின் வாரிசுகள் அனைவரும் ஒரே குடும்பமாக கூட்டுக்குடும்பமாக வசித்து வந்தனர் என்றாலும், மேற்படி

பாக்கியம் அவர்களுக்கும், அவர்களின் பாகத்தின் ஒரு பகுதியாக தாவா சொத்தினை 1980ம் ஆண்டிற்கு முன்பே அவருக்குக் கொடுக்கப்பட்டு, அவராலும், அவரது கணவர் அழகர்சாமி அவர்களாலும் அனுபவித்து வரப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பாக்கியத்தின் மகன் தான் அழகர்சாமி ஆவார். பாக்கியம் மற்ற பாகவஸ்தர்களுடன் கூட்டாக அனுபவித்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, கூட்டுக்குடும்பமாக வாழ்ந்து வந்தோம், சாட்சி மீண்டும் தெரியாது என்று கூறுகிறார்.

3. வா.சா.ஆ.1 ஆவணமானது 24.04.1980ம் தேதியில் பாகப்பிரிவினைப் பத்திரத்தில் தாவா சொத்து காட்டப்பட்டுள்ளதா என்றால் தெரியவில்லை. மேற்படி ஆவணத்தில் எனது தந்தை அழகர்சாமி சாட்சி கையொப்பம் செய்துள்ளார் என்றால் இல்லை. 24.04.1980 பாகப்பிரிவினை பற்றி வழக்குரையில் சொல்லியுள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய எதிர்வழக்குரையில் பத்தி 13–ல் 24.04.1980ம் தேதிய பாகப்பத்திரத்தில் உள்ள அட்டவணை ஏ மற்றும் அட்டவணை பி–யை குறித்து குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எதிர்வழக்குரை தயார் செய்த போது 24.04.1980ம் தேதிய பாகப்பத்திரத்தை படித்துப் பார்த்து விவரம் சொன்னேன் என்றால் சரிதான்.

4. பாகப்பத்திரத்தில் பல சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தைத் தவிர வேறு சொத்துக்களில் நான் பாகம் கேட்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து பாட்டியிடமிருந்து எனது தந்தைக்கு கிடைக்கப்பெற்ற சொத்து என்றால் சரிதான். எனது பாட்டிக்கு 3 பெண்பிள்ளைகள், 2 ஆண்மகன்கள் என்றால் சரிதான், ஒரு

மகன் சீனிவாசன் இறந்துவிட்டார். மேற்படியார்கள் செல்லம்மாள், சரஸ்வதி, யசோதை, எனது தந்தை, சீனிவாசன் ஆகியோர் ஆவார்கள் என்றால் சரிதான். பாக்கியம் எனது தந்தைக்கு உயிலோ, செட்டில்மென்டோ எழுதிவைக்கவில்லை என்றால் சரிதான். பாக்கியம் சொத்தில் ஐந்து வாரிசுகளுக்கும் பங்கு உண்டு என்றால் சரியல்ல, எனது தந்தைக்கு மட்டும் சொத்து கிடைக்க வேண்டும்.

5. எனது தந்தை அவரது சகோதரர் சீனிவாசன் மற்றும் மூன்று சகோதரர்களிடமிருந்து விடுதலை பத்திரம் எழுதி வாங்கவில்லை என்றால் ஞாபகமில்லை. சீனிவாசன் சிறுவயதிலேயே இறந்துவிட்டார், திருமணம் ஆகாமல் இறந்துவிட்டாரா என்றால் எனக்கு தெரியாது. பாக்கியத்தின் கடைசி மகள் யசோதை என்றால் சரிதான், யசோதை தான் 1ம் வாதி என்றால் சரிதான். யசோதையம்மாள் நாகப்பக்கவுண்டரின் மகன் சங்கரலிங்கத்தை திருமணம் செய்துக்கொண்டார் என்றால் சரிதான். எனது தந்தை இறந்தபோது அவரது வயது என்ன என்றால் 45 இருக்கும். எனது பாட்டி எனது தந்தை இறக்கும் சமயத்தில் உயிருடன் இருந்தார் என்றால் அவர் 1990 ஆம் ஆண்டு இறந்தார், பாட்டிக்கு முன்பே இறந்துவிட்டார். அவரின் இறப்புச் சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

6. பாக்கியம் இறந்த விபரங்களை வழக்கறிஞரிடம் சொன்னேன் என்றால் சரிதான். பாக்கியத்தின் மற்ற பெண்பிள்ளைகளுக்கு வேறு சொத்துக்கள் கொடுத்துள்ளாரா என்றால் வேறு சொத்து உண்டா என்று எனக்கு தெரியாது. எனது தந்தைக்கு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், நான் அதை நீதிமன்றத்தில்

தாக்கல் செய்துள்ளேன். பாக்கியம் எனது தந்தைக்கு சொத்து கொடுத்தது என்றாலும், அதை எனது தந்தை அனுபவம் செய்து வந்தார் என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல. எனது தந்தைக்கு பட்டா வழங்கும்போது எனக்கு வயது 20 இருக்குமா என்றால் இல்லை, 5 வயது இருக்கும். எனது தந்தைக்கு பட்டா வழங்கியதற்கான எனது தந்தை தாக்கல் செய்த ஆவணங்கள் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை.

7. தாவா சொத்து உள்ள கிராமம் ஜமீன் கிராமமா என்றால் எனக்கு தெரியாது. ஜமீன்தாரி ஒழிப்பு சட்டத்தின்படி தாவா சொத்துக்களை எடுத்துக்கொண்டார்களா என்றால் எனக்கு தெரியாது. போடிநாயக்கனூர் ஜமீன் இருந்தது எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். தாவா கிராமத்தை ஜமீனை ஒழித்து, சர்க்கார் எடுத்துக்கொண்டு இரயத்துப்பட்டா வழங்கினார்களா என்றால் எனக்கு தெரியாது. நாகப்பக்கவுண்டர், கெப்பண்ணக்கவுண்டர் ஆகியோர்களுக்கு பட்டா கொடுத்தார்களா என்றால் வா.சா.ஆ.6 – ஏ பதிவேட்டில் உள்ளது. எனது தந்தைக்கு கொடுத்த UDR பட்டா வருவாய் துறையினரால் வழங்கப்பட்டது என்றால் சரிதான். தாவா சர்வேயில் யார் அனுபவித்தார்களோ அவர்களுக்கு Ryot பட்டா வழங்கப்பட்டது என்றால் ஞாபகமில்லை.

8. போடிநாயக்கனூரில் தாவா சர்வே என்னை தவிர வேறு சொத்துக்கள் எங்கள் குடும்பத்தில் உள்ளதா என்றால் உண்டு. 20 ஏக்கர் இடம் இருக்குமா என்றால் 5, 6 ஏக்கர் இருக்கும். மேற்படி இடங்களுக்கு எனது தந்தை பெயரில் செட்டில்மென்ட் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தந்தை பெயரில் கிராம ஏ பதிவேட்டில் பதிவாகியுள்ளது என்றால் சரிதான். அந்த நிலங்களை நான் அனுபவித்து

வருகிறேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.6 மற்றும் எனக்கு வழங்கப்பட்ட பட்டா இரத்தாகவில்லை என்றால் சரிதான். எனது தந்தைக்கு UDR பட்டா வழங்குவதற்கு முன்பு வா.சா.1–க்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. பாக்கியத்தின் பெயரில் செட்டில்மென்ட் பட்டா வந்ததா என்றால் எனக்கு ஞாபகமில்லை.

9. தொட்டப்பக்கவுண்டர் 1957ம் ஆண்டு இறந்துவிட்டதாக எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும், அதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது அத்தை சொல்லி தெரியும். அவர் இறக்கும்போது என்ன வயது இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. எனது தந்தை பிறந்த தேதி, இறந்த தேதி குறித்து ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் தேடிப் பார்க்க வேண்டும். பாக்கியம் இறந்த தேதியை காட்டுவதற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.6 ஏ பதிவேட்டில் கொடுக்கப்பட்ட சமயத்தில் தொட்டப்பக்கவுண்டர் உயிருடன் இல்லை என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.6 ஏ பதிவேடு போன்றே தொட்டப்பக்கவுண்டர் பெயரில் ஏ பதிவேடு பார்த்துள்ளேனா என்றால் தெரியாது.

10. பி.வா.சா.ஆ.1 UDR பட்டா எனது தந்தையின் பெயரில் வழங்குவதற்கு முன்பு யார் பெயரில் இருந்தது என்றால் தெரியாது. எனது தந்தைக்கு உரிமையுள்ளது என்பதை காட்ட பி.வா.சா.ஆ.1 ஆவணம் மட்டும் தான் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் விஸ்தீரணம் எனக்கு தெரியுமா என்றால் 1.94 ஏக்கர் ஆகும். நான் விற்றது 94 செண்ட் ஆகும். மீதமுள்ள 1 ஏக்கர் சுப்பையாவின் வாரிசுகளுக்கு கொடுத்தேன் என்றால் வாய்மொழியாக கொடுத்தேன். எந்த வருடம் கொடுத்தேன் என்றால்

ஞாபகமில்லை. நான் அப்போது இளவரா என்றால் 20 வயது இருக்கும், எனது தாயார் அமிர்தவள்ளி கொடுத்தார், அப்போது நான் இருந்தேன். மேற்சோன்னவாறு எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

11. வாய்மொழியாக கொடுத்ததற்கு எனது தாயார் பத்திரம் எழுதியுள்ளாரா என்றால் இல்லை. நான் முதன்முதலில் எப்போது விற்றேன் என்றால் 1995ம் ஆண்டு ஆகும். அதற்கு முன்பே வாய்மொழியாக கொடுத்தேன் என்றால் சரிதான். சுப்பையாக்கவுண்டரின் தந்தை கெப்பண்ணக்கவுண்டர் என்றால் சரிதான். சுப்பையாக்கவுண்டருக்கு இரண்டு சகோதரிகள் இருந்தார்களா என்றால் எனக்கு தெரியாது. கெப்பண்ணக்கவுண்டருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் சுப்பையாக்கவுண்டரை மட்டும் எனக்கு தெரியும். சுப்பையாக்கவுண்டருக்கு நான் கொடுத்த சொத்தின் மதிப்பு பல லட்சம் விலை மதிப்புடைய சொத்துக்கள் என்றால் சரிதான். சுப்பையாக்கவுண்டர் குடும்பத்தினுடன் அனுசரணையாக பேச்சுவார்த்தை உண்டு என்றால் சரிதான்.

12. சுப்பையாக்கவுண்டரின் வாரிசுகளான 1 முதல் 10 பிரதிவாதிகள் வரை கட்சி செய்கிறார்களா என்றால் எனக்கு தெரியாது. சுப்பையாக்கவுண்டரின் வாரிசுகளுக்கும், வா.சா.1 மாதவனுக்கும் பேச்சுவார்த்தை கிடையாது என்றால் சரியல்ல, பேசிக்கொள்வார்கள். எனது தாயார் சுப்பையாக்கவுண்டரின் குடும்பத்திற்கு தானமாக சொத்துக்களை வழங்குவதற்கான காரணம் என்ன என்றால் எப்போது கொடுத்தார் என்றே எனக்கு ஞாபகமில்லை. சுப்பையாக்கவுண்டரின் தந்தை கெப்பண்ணக்கவுண்டர் பெயரில் செட்டில்மென்ட் பட்டா

வழங்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. எனது தாயார் சுப்பையாக்கவுண்டரின் குடும்பத்திற்கு நிலங்கள் வழங்கியதாக பொய் என்றாலும், அவர்களுக்கு ஏற்கனவே உரிமையுண்டு என்றால் சரியல்ல.

13. தாவா சொத்தில் அனுபவ பாத்தியத்தில் இருந்து வருவதாக எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், எந்த தேதி, மாதம், வருடத்திலிருந்து அனுபவ பாத்தியத்தில் இருந்து வருகிறோம் என்று குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, 1975ம் ஆண்டிலிருந்து இருந்து வருகிறோம். நான் எத்தனை ஆவணங்கள் மூலம் விற்பனை செய்தேன் என்றால் 7, 8 இருக்கும். கிரைய பத்திரங்கள் பிருதுராஜ்ஜியமாக கிடைக்கப்பெற்றது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஞாபகமில்லை. நாகப்பக்கவுண்டர் மகன் பெயர் சங்கரலிங்கம் என்றால் சரிதான். அவர் தான் எனது அத்தை 1ம் வாதி யசோதையின் கணவர் என்றால் சரிதான். பாக்கியத்தின் கணவர் பெயர் சங்கரலிங்கக் கவுண்டர் என்றால் சரிதான். மேற்படி பெயர் ஒற்றுமையை பயன்படுத்தி நானும், எனது தந்தையும் சேர்ந்து கிராம கணக்குகளை திருத்தம் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

14. எனக்கு தெரிந்து கெப்பண்ணக்கவுண்டருக்கும் நாகப்பக்கவுண்டருக்கும் இடையில் தாவா சொத்துக்களை பொறுத்து பாகம் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்றால் எனக்கு தெரியாது. பாகப்பிரிவினை ஏற்படாததால் மாதவன் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் விற்கும்போது காலியிடமாக பத்திரத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். விற்பனைக்கு பிறகோ, முன்போ மாதவனுக்கு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை.

<u>வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கிணங்க வாதி தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.</u>

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 17.02.2026 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.02.17 16:28:23 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
17.02.2026.